# அஃறிணை வினைகள் : நாலடியாரும் நான்மணிக்கடிகையும்

# Inflammatory Reactions: Naladiyarum Nanmanikkadigaiyum

**க. செந்தமிழ்ச் செல்வி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

**K. Senthamil Selvi**
*Ph.D Scholar*
*Tamil Department*
*Madurai Kamaraj University, Madurai*

## ஆய்வுச்சுருக்கம்

*வாழ்க்கையின் எளிமையான பொருட்களை உவமைகளாகக் கையாண்டு நீதி புகட்டுவதில் நாலடியார் தனித்துவம் பெற்று விளங்குகிறது. அதே போன்று விளம்பிநாகனார் என்னும் புலவரால் இயற்றப்பட்ட நான்மணிக்கடிகையில் 101 பாடல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஒவ்வொரு பாடலும் நான்கு அடிகளால் ஆனது. இந்நூற் பாடல்கள் ஒவ்வொன்றிலும், நான்கு மணியான கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. இதனாலேயே இது நான்குவகை மணிகளால் ஆன ஆபரணம் நான்மணிக்கடிகை என்று அழைக்கப்படுகிறது. இதில் மொத்தம் நூற்று நான்கு பாடல்கள் உள்ளன.*

*நாலடியாரில் மொத்தம் 1600 அடிகளும் 7884 சொற்களும் இவற்றில் 4000 தனிச் சொற்களும், நான்மணிக் கடிகையில் 416 அடிகளும் 2064 சொற்களும் இவற்றில் 1297 தனிச் சொற்களும் அடங்கும். ஆக மொத்தமுள்ள 9948 சொற்களில் அஃறிணை வினைகளை ஆராயும் பொருட்டு இக்கட்டுரை அமைகிறது. நாலடியார் மற்றும் நான்மணிக்கடிகையில் அஃறிணை வினைகளை தொல்காப்பிய இலக்கண விதிகளைக் கொண்டு பொருள் அடிப்படையில் அல்லாமல் சொற்களை வகைப்படுத்தும் நோக்கில் வினைச் சொற்களைப் பகுத்துக் காட்டப்பட்டுள்ளது.*

## Abstract

*Naladiyar specializes in administering justice by using the simple objects of life as parables. Similarly, it contains 101 songs in Nonmanikadigai, composed by the poet Vilambinaganar. Each song was composed of four beats. Each of the two hundred songs is told in four hours of commentary. This is why the ornament made of four types of beads is called Nonmanikadigai.*

*It has a total of one hundred and four songs. Naladiyar has a total of 1600 lines and 7884 words, of which 4000 are singular, In Nonmanikadigai 416 lines and 2064 words, of which 1297 are singular. Thus, this article is designed to explore the verbiage of 9948 words in total. Verb words are categorized with the aim of classifying words rather than semantic ones with grammatical rules that transcend the verbs Naladiyar and Nanmanikkadigai.*

***முக்கியச்சொற்கள்:***

*நாலடியார், பதினெண்கீழ்க்கணக்கு, நான்மணிகடிகை, அஃறிணை வினை, தமிழ் இலக்கணம்.*

***Keywords:***

*Naladiyar, Pathinenkilkanakku, Nanmanikadigai, Verbiage, Tamil Literature.*

## Citation

Senthamil Selvi, K. “Inflammatory Reactions: Naladiyarum Nanmanikkadigaiyum.” *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 1, 2021, pp. 25–31.

**முன்னுரை**

*பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான நாலடியாரும் நான்மணிகடிகையும் தமிழ் நீதி நூல் தொகுப்பைச் சேர்ந்த நான்கடி வெண்பாக்களால் ஆன சிறப்பினை உடையது. நாலடியார் சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நானூறு தனிப்பாடல்களின் தொகுப்பாகக் கருதப்படுகிறது. இதனால் இது நாலடி நானூறு எனவும் பெயர் பெறும். 'வேளாண் வேதம்' என்ற பெயரும் உண்டு. பல நேரங்களில் இது புகழ் பெற்ற தமிழ் நீதி நூலான திருக்குறளுக்கு இணையாகப் பேசப்படும் சிறப்பைப் பெற்றுள்ளது.பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள ஒரே தொகை நூல் நாலடியார் ஆகும்.*

**அஃறிணை வினைகள்**

*அஃறிணை என்பது தமிழ் இலக்கணத்தில் பகுத்தறிவு இல்லாத உயிரினங்களையும், உயிரற்ற பொருள்களையும் வகைப்படுத்தும் சொல்லாகும். இது (அல் +திணை) என்று பிரிக்கப்படும். உயர்திணை அல்லாதது என பொருள்படும். தேவர், மாந்தர், நரகர் என்பவர்களை சுட்டும் பெயர்கள் உயர்திணையாக வகுக்கப்பட்டுள்ளன.*

*உயர்திணைப் பெயர்களை அஃறிணைப் பொருள்களான விலங்குகள், தோட்டம் ஆகியவற்றிற்கும் வைக்கப்படலாம். தமிழ் இலக்கணத்தில் இவை 26 வகை விரவுப்பெயர்களில் காணமுடியும். இவ்வாறான விரவுப்பெயர்களை தொல்காப்பியர் அஃறிணை வினைகளை பின்வருமாறு வகைப்படுத்துகிறார்.*

1. *பன்மை வினைமுற்று*
2. *ஒருமை வினைமுற்று*
3. *அஃறிணைப் பன்மை வினைமுற்று*
4. *குறிப்பு வினைமுற்று*

*மேலே குறிப்பிட்டுள்ள வினைமுற்றுகள் குறித்து நாலடியார் மற்றும் நான்மணிக்கடிகையில் காணலாம்*

**பன்மை வினைமுற்று**

*அஃறிணையில் பன்மை வினைமுற்றானது அ, ஆ, வ என்னும் மூன்று ஈற்றுச் சொற்களும் அஃறிணைப் பன்மைப் படர்க்கைச் சொற்களாகும்.*

***அ ஆ வ எனவருஉம் இறுதி***
***அப்பால் மூன்றே பலவற்றுப் படர்க்கை*** ***(நூற்பா .216)***

*அ, ஆ, வ என்னும் அஃறிணைப் பன்மைச் சொற்கள் பின்வருமாறு புணரும். அ என்பனவற்றை ஈற்றுச் சொற்களாகக் கொண்டு உண்டன, உண்ணா நின்றன, உண்பன, தொக்கன, தொக்க, அஞ்சின, போயின, போயன, போய, உண்பன, உண்ப, வருவன, வருவ ஆகிய சொற்களாக பயின்று வருவதைத் தொல்காப்பிய இலக்கணத்தின் வழியாக நாம் அறிகிறோம். மேலும் இவை போன்ற சொற்கள் நாலடியாரில்,*

***எதுணையும் ஆற்ற பலவானால் தொக்க***
***உடம்பிற்கு ஒப்புரவு செய்து ஒழுகாது உம்பர்*** ***(நாலடி. 37)***

***மக்கள் பிணத்த சுடுகாடு தொக்க*** *(நாலடி. 121)*
***பாவமும் ஏனைப் பழியும் பட வருவ*** *(நாலடி. 295)*
***ஏறியபின் அறிப மாநலம் மாசுஅற*** *(நான். 10)*
***கந்தில் பிரிப்பர் களிற்றை கதம் தவிர*** *(நான். 10)*

*மேலும் ஆ, வ என்பனவற்றை ஈற்றுச் சொற்களாகக் கொண்டு உண்ணா, தின்னா, தங்கா, கூறுவ, உண்குவ, தின்குவ எனப் பன்மை வினைமுற்றுத் தழுவி வரும் சொற்களைப் பின்வருமாறு இலக்கியத்தின் ஊடாக காணலாம்.*

***பரவா வெளிப்படா பல்லோர்க்கண் தங்கா*** *(நாலடி. 8)*
***புகழ் செய்யும் பொய்யா விளக்கம் இகழ்ந்து ஒருவன்*** *(நான். 22)*
***கண்டனவும் காணா கெடும்*** *(நான். 40)*
***இன்னா வித்து ஆகிவிடும்*** *(நான். 30)*
***பாவமும் ஏனைப் பழியும் படவருவ*** *(நாலடி. 295)*
***கூற்றமும் கூறுவ செய்து உண்ணாது ஆற்ற*** *(நான். 39)*

*என்னும் பாடல் வரிகளில் வெளிப்படா, தங்கா, பொய்யா, காணா, இன்னா, வருவ, கூறுவ முதலிய அஃறிணை படர்க்கைப் பன்மை வினைச்சொற்களான அ, ஆ, வ ஆகிய ஈற்றெழுத்துக்களைக் கொண்டு இலக்கியங்களில் வந்துள்ளதைக் காண முடிகிறது.*

**ஒருமை வினைமுற்று**

*ஒருமையை உணர்த்தும் படர்க்கை வினையானது கு, று, டு எனும் மூன்றும் குற்றியலுகர ஈறுகளை ஈற்றில் கொண்டு முடியும் சொற்களைத் தொல்காப்பிய நூற்பாவானது*

***ஒன்றன் படர்க்கை த ட ற ஊர்ந்த***
***குற்றிய லுகரத்து இறுதி யாகும்*** *(நூற்பா. 217)*

*இந்நூற்பாவின் அடிப்படையில் ஒருமையை உணர்த்தும் வினைமுற்றானது புக்கது, வந்தது, புக்கன்று, வந்தன்று, கூறிற்று, குண்டுகட்டு, ஒடிற்று, குறுந்தாட்டு என வருகிறது. ஆயினும் இலக்கியங்களில் வெகு சிலவே காணப்படுகிறது. எனினும் த ட ற என்னும் எழுத்துக்களின் வழி ஊர்ந்து வந்த குற்றியலுகர எழுத்துக்களை இறுதி ஈற்றாகக் கொண்டச் சொற்களை நாலடியார் மற்றும் நான்மணிக்கடிகை சில பாடல்களின் வழியாக குனிந்து, உள்நின்று, இகந்து, விரைந்து, கடந்து, வாய்த்து ஆகிய சொற்களை காணமுடிகிறது.*

***கோல்கண்ணள் ஆகும் குனிந்து*** *(நாலடி. 27)*
***தோல்பை உள்நின்று தொழிலற செய்து*** *(நாலடி. 37)*
***இன்மை குழியுள் விரைந்து*** *(நான். 14)*
***கற்றான் கடந்து விடும்*** *(நான். 16)*
***தகுதி இறுவாய்த்து உயிர்*** *(நான். 17)*

*மேலும் குறுந்தாட்டு, குண்டுகட்டு போன்ற சொற்கள் நாலடியார் மற்றும் நான்மணிக்கடிகை ஆகியவைகளில் இடம்பெறவில்லை.*

*ஒன்றனை அழியும் படர்க்கை வினைச்சொல்லானது த, ட, ற என்னும் சொற்கள் ஈற்றில் து, டு, று ஆகிய எழுத்துக்கள் உண்டது, கூயிற்று, தாயிற்று, குண்டுகட்டு என மாறும் என்பது இலக்கண விதி.*

*பாலுணர்த்தும் எழுத்துக்களைப் படர்க்கை வினைச்சொல் ஈற்றாக கொண்டவாறு தொல்காப்பியர் இவ்வியலில் சுட்டிக்காட்டியுள்ளார்.*

**அஃறிணைப் பன்மை வினைமுற்று**

*ஒருமை பன்மை ஆகியவை பாலறியுமாறு வரும், மேலே கூறிய ஆறு ஈற்றுச் சொற்களும் அஃறிணைப் பன்மை வினைமுற்றாகும். இவற்றினை தொல்காப்பியர்*

***பன்மையும் ஒருமையும் பால்அறி வந்த***
***அம்மு விரண்டும் அஃறிணை அவே*** ***(நூற்பா. 703)***

*அ, ஆ, வ, து, று, டு ஆகிய ஆறும் பன்மையும் ஒருமையும் வேறுபாடறிய அமைந்த அஃறிணை வினைமுற்று ஈறுகளாகும் என்கிறார். இவைகளை மேலே கூறிய இலக்கிய பாடல் வரிகளின் மூலம் அறிந்து கொள்ள முடியும்.*

***எவன் என்னும் குறிப்பு முற்று***
***அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும்***
***ஒக்கும் என்ப எவன்என் வினாவே*** ***(நூற்பா. 704)***

*அஃறிணையில் எவன் என்ற வினாச்சொல் ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய இரண்டு பால்களுக்கும் இலக்கியச் சொற்களைப் பிரித்தறியும் போது குறிப்பு முற்றாக வரும் என்கிறது தொல்காப்பியம்.*

***சான்றாக,***
***அது எவன்?***
***அவை எவன்?***

*ஆகிய இரண்டு வினாக்குறிப்பும் நாலடியாரில் இரண்டு இடங்களில் வருகின்றது. நான்மணிக்கடிகையில் இதுபோன்ற சொற்கள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.*

***நினைப்ப கிடந்தது எவன் உண்டாம் மேலை*** ***(நாலடி. 105)***
***கண்டாரோடு எல்லாம் நகாஅது எவன் ஒருவன்*** ***(நாலடி. 324)***

**குறிப்பு வினைமுற்று**

*தொல்காப்பியம் குறிப்பு வினைமுற்றினை பத்து வினைகுறிப்புச் சொற்களாக பகுக்கிறார்.*

***இன்று இல உடைய என்னும் கிளவியும்*** ***(நூற்பா.256)***

*இன்று, இல, உடைய, அன்று, உடைத்து, அல்ல, உள எனச் சொல் பற்றி வரும் ஏழும், பண்புகொள்கி கிளவி, பண்பினாகிய சினைமுதற் கிளவி, ஒப்பொடு வரும் கிளவி எனப் பொருளைக் கொண்டு வரும் மூன்றும் ஆகப் பத்தும் வினைக் குறிப்புச் சொற்கள் என தொல்காப்பியர் வரையறை செய்கிறார்*

| | | |
|---|---|---|
| ***இன்று*** | - | ***கோடின்று, செவியின்று*** |
| ***இல*** | - | ***கோடில, செவியில*** |
| ***உடைய*** | - | ***கோடுடைய, செவியுடைய*** |
| ***அன்று*** | - | ***நாயன்று, நரியன்று*** |
| ***உடைத்து*** | - | ***கோடுடைத்து, செவியுடைத்து*** |
| ***அல்ல*** | - | ***உழுந்தல்ல, பயறல்ல*** |
| ***பண்புகொள்கிளவி*** | - | ***கரியது, கரிய*** |
| ***உள*** | - | ***உழுந்துள, பயறுள*** |
| ***பண்பினாகிய சினை முதற்கிளவி*** | - | ***குறுங்கோட்டது, குறுங்கோட்டன*** |
| ***ஒப்பொடு வருஉங்கிளவி*** | - | ***பொன்னன்னது ,பொன்னன்னன எனவரும்.*** |

*‘இன்று’ என்னும் குறிப்பு வினைமுற்றானது நாலடியாரில் ஐந்து இடங்களிலும், நான்மணிக்கடிகையில் இடம்பெறாததும் குறிப்பிடத்தக்கது.*

***பொருமுரண் ஆற்றுதல் இன்று (நாலடி.149)***
***அறுநவை ஆற்றுதல் இன்று (நாலடி.295)***

*‘இல’ என்னும் குறிப்பு வினைமுற்றானது ‘இல்லை’ என்றப் பொருளில் வரும். இவை நாலடியாரில் ‘இல்ல’ என்னும் சொற்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

***இகழ்தலில் கோறல் இனினே மாற்று இல்ல (நாலடி.219)***

*“உடைய” என்னும் சொல் நாலடியாரில் மூன்று இடங்களிலும் நான்மணிக்கடிகையில் ஒரு இடத்திலும் வருகிறது.*

***ஊக்கிதாம் கொண்ட விரதங்கள் உள்உடைய (நாலடி.57)***
***அருமை உடைய அரண் சேர்ந்தும் உய்யார் (நாலடி.164)***
***தொகை இனிது தொட்டு இனினே வழங்கின் தகைஉடைய (நான்.36)***

*‘அன்று’ என்னும் குறிப்பு வினைமுற்றானது நாயன்று, நரியன்று எனவும் வரும். இவை பதினோறு இடங்களிலும், நன்மணிக்கடிகையில் இடம்பெறாமலும் உள்ளன.*

***உண்டாக வைக்கற்பாற்று அன்று (நாலடி.1)***
***வசை அன்று வையகத்து இயற்கை நசை அழுங்க (நாலடி. 11)***
***பேதமை அன்று அது அறிவு (நாலடி. 249)***

*‘உடைத்து’ என்னும் சொல்லானது கோடுடைத்து, செவியுடைத்து, சோறுடைத்து, காடுடைத்து என இலக்கியங்களில் சொற்கள் பயின்று வருவதைக் காணமுடியும். அவ்வகையில் நாலடியாரில் ஏழு இடங்களில் ‘உடைத்து’ என்னும் சொல் வருவதைக் காண முடிகிறது.*

***தலை நக்கி அன்னது உடைத்து*** ***(நாலடி. 87)***
***நின்று வீழ் தக்கது உடைத்து*** ***(நாலடி. 102)***

*‘அல்ல’ என்னும் சொல்லானது நாலடியாரில் ஏழு இடங்களிலும் நான்மணிக் கடிகையில் ஒரு இடத்திலும் காணப்படுகிறது.*

***மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து*** ***(நாலடி. 131)***
***விச்சை மற்று அல்ல பிற*** ***(நாலடி.134)***
***அல்ல புரிந்தோருக்கு அறம் தோன்றா எல்லாம்*** ***(நான். 10)***

*மேலும் பண்புகொள் கிளவி என்பது நிறமுதலிய பண்புணர்த்துஞ் சொல்லைத் தனக்கு முதனிலையாகக் கொண்டது. பண்பினாகிய சினைமுதற்கிளவி என்பது, மேற்குறித்த பண்பொடு பொருந்திய சினையொடு முதலையுணர்த்துஞ் சொல்லாகவும் ஒப்பொடு வரூஉங் கிளவி என்பது, உவமப்பொருள் பற்றி வரும் சொல்லாகவும் வருகின்றன.ஆகையால் இவைகளை குறிப்பால் பொருளை உணர்த்தும் வினைகளாக கொள்ளுதல் இயல்பு அன்று. பெரும்பாலும் மற்றொன்றை பொருள் பற்றி வருவதாக அமைகின்றன.*

**துணை நூல்கள்**


1. *நாலடியார், சைன முனிவர், பதினெண் கீழ்க்கணக்கு.*
2. *அரவிந்தன், உரையாசிரியர்கள் (எ.ப). (2018). சென்னை, மாணிக்கவாசகர் பதிப்பகம், ப. 332.*
3. *நாலடியார், சமண முனிவர்கள் பாடிய 400 பாடல்களின் தொகுப்பு.*
4. *நாலடி நானூறு எனும் நாலடியார். (1 ஜனவரி 2004). மானூஸ், சந்தியா பதிப்பகம்,*
5. *முதலியார், சிங்காரவேலு, அ., அபிதனா சிந்தாமணி. (1983). தமிழ் இலக்கியத்தின் கலைக்களஞ்சியம், (1931) புது தில்லியின் ஆசிய கல்விச் சேவைகளால் மறுபதிப்பு செய்யப்பட்டது.*
6. *நான்மணிக்கடிகை, மூலமும் விருத்தி உரையும், (1 ஜனவரி 2010) சாந்தா பப்ளிஷர்ஸ், முதல் பதிப்பு.*


## References


1. http://www.tamilvu.org/library/l2800/html/l2800ind.htm
2. Aravindan, M.V. (2018). Uraiaasiriyargal, (Eighth edition), Chennai, Manivasagar Padhippagam, P. 332.
3. Naladiyar, *Samana Munivarkal Padiya 400 Padalgalin Thoguppu*.
4. *Naaladi Naanooru Enum Naladiyar*, 1 January (2004). Manoos, Sandhya Publications.
5. Mudaliyar, Singaravelu, A., Apithana Cintamani. (1983). *An encyclopaedia of Tamil Literature*, (1931), New Delhi, Reprinted by Asian Educational Services.
6. Nanmanik Kadikai. (1 January 2010). *Moolamum Viruthi Uraium*, Santha Publishers, First edition.